*கவனிக்க.-2022.09.02 ஆந் திகதிய 2296 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV(அ) ஆகியவை பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2297 - 2022 සැප්තැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2022.09.09

*2297 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | *1406* | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | *1413* |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | *1416* |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | *1409* | ஏல விற்பனைகள் | *1418* |
| ஆய விற்பனையும் குத்தகையும் | *1411* | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** பவித்ரா வன்னியாரச்சி சகுர்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2022, செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1405 - B 082379 - 5,403 (2022/09)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## காணி அமைச்சு
## இலங்கை நில அளவைத் திணைக்களம்

### விலைமனுக் கோரல்

***பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2022***

*கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக் கோரல்கள் 2022.09.26ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக் கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.*

| *மாகாணம்* | *மாவட்டம்* | *பிரதேச நில அளவை அலுவலகம்* | *கேள்விமனு ஒப்படைத்தல்* | *அருகில் உள்ள நகரம்* | *தேவைப்படும் திகதி* |
|---|---|---|---|---|---|
| தென் மாகாணம் | மாத்தறை | கொட்டொபொல | மாகாண நில அளவையாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், புதிய நகரம், காலி. | கொட்டபொலவைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2022.11.01 |
| கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | களவாஞ்சிக்குடி | மாகாண நில அளவையாளர் நாயகம் (கிழக்கு மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், திருகோணமலை. | களவாஞ்சிக்குடியைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2022.11.01 |
| மத்திய மாகாணம் | கண்டி | நீளமானது | மாகாண நில அளவையாளர் நாயகம் (மத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், கன்னோருவ, பேராதனை. | திகனவைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2022.11.01 |
| மத்திய மாகாணம் | மாத்தளை | லக்கல | மாகாண நில அளவையாளர் நாயகம் (மத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், கன்னோருவ, பேராதனை. | லக்கலாவைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2022.11.01 |

***பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள்.***- *அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அதுபோன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தது மூன்று வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள் மற்றும் வாகன தரிப்பிட வசதிகள்*

இருக்க வேண்டும். எல்லைக் கற்கள் தயாரிப்பதற்கான இட வசதி இருப்பதோடு ஆகக் குறைந்தது பத்து அலுவலர்கள் இருக்கக்கூடிய அறை அல்லது இடவசதிகள் இருக்க வேண்டும். கட்டிடத்தின் பரப்பளவு குறைந்தது 2,500 சதுர அடி அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்குப் பெறுதல் (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2022.09.26ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

ஏ. திசாநாயக்க,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
கிருல வீதி,
கொழும்பு 05.

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2022**

விலைமனுக் கோரல் விண்ணப்பப்படிவம் - 2022

**கட்டிட உரிமையாளருக்காக :**

01. முழுப்பெயர் :------------------------------------------------------------------------------------------------.
02. முகவரி :----------------------------------------------------------------------------------------------------.
03. தொலைபேசி இலக்கம் :------------------------------------------------------------------------------------------.
04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----------------------------------------------------------------------------.

**கட்டிடம் தொடர்பாக :**

01. எந்த பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது ? :--------------------------
----------------------------------------------------------------------------------------------------------.
02. மாதாந்த வாடகைத் தொகை :-----------------------------------------------.
03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி :--------------------------------------------------------------------------.
04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ. :---------------------------------;
05. இடத்தின் விஸ்தீரணம் :---------------------------------------------------------------------------------------
06. கட்டிடத்தின் விஸ்தீரணம் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களும் :------------------------
07. தனியாக அவதானிக்கக்கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா ? :-----------------------------------------------.
08. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா ? :---------------------------------------------.
09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில்/கம்பி /வேலி) :-------------------------------------------------.
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை ? :----------------------------------------------------.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

---------
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

09-127

## இலங்கைப் புகையிரத சேவைகள்

விலைமனுக்களுக்கான அழைப்பு

கடன் இலக்கம் : IDA- 63440

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசானது, CERC செயற்றிட்டத்தின் சுகாதார வசதிகளை மேம்படுத்தல் ஆகு செலவிற்காக, உலக வங்கியிடமிருந்து கடனொன்றைப் பெற்றுள்ளதுடன், பின்வரும் பெறுகையின் ஒப்பந்தத்திற்காக இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை செலவிடுவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. கொழும்பு, இலங்கை புகையிரத சேவைகள் சார்பாக செயற்றிட்டத்தின் பெறுகைக் குழுவின் தலைவர் உள்ளூர் உற்பத்தியாளர்கள் / வழங்குநர்களிடமிருந்து இதற்காக முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றனர்.

**அட்டவணை I**

| தொடர் இலக்கம் | கோவை இல. | விபரம் | படிவக் கட்டணம் ரூபா.ச. | விலைமனுப்பிணையம் ரூபா.ச. |
|---|---|---|---|---|
| 1 | SRS/ F 7824 | கொழும்பு கோட்டை மற்றும் மருதானை புகையிரத நிலையங்களுக்கு 450 எண்ணிக்கையான இருக்கைகளை வழங்கல் | 5,500.00 | 283.000.00 |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் முறைமையின் பிரகாரம் (NCB) இவ் விலைமனுக்கோரல் மேற்கொள்ளப்படும்.

4. 2022.08.22 ஆந் திகதி முதல் 2022.09.12 ஆந் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வார வேலை நாட்களில் இதற்காக ஆர்வமும் தகைமையும் பெற்றுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரியில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதுடன் விலைமனு ஆவணங்களைப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.

பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை),
புகையிரத சேவைகள் பெறுகைக்கான உப திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.

தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11)2436818.
தொலைநகல் இலக்கம் : 94(11) 2432044.
மின்னஞ்சல் : srs.slr.@ gmail .com
இணையத்தளம் : www.railway.gov.lk/ tender2@railway.gov.lk

5. SRS/F. 7824 இன் மேலதிக தகவல்களிற்காக தயவு செய்து, கொழும்பு 10, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை, இலங்கை,புகையிரத சேவைகள் உப திணைக்களம் , பிரதான பொறியியலாளர் ( பாதை மற்றும் வேலைகள்) ஐத் தொடர்பு கொள்ளவும்.

**அட்டவணை II**

| கோவை இலக்கம் | தகைமைகளின் தேவைப்பாடுகள் | விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கான திகதி மற்றும் முகவரி |
|---|---|---|
| SRS/ F 7824 | ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாதவராக இருப்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். | 2022.09.08 பிரதான பொறியியலாளர் பாதை மற்றும் வேலைகள் உப திணைக்களம், கொழும்பு 10 |

| *கோவை இலக்கம்* | *தகைமைகளின் தேவைப்பாடுகள்* | *விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கான திகதி மற்றும் முகவரி* |
|---|---|---|
| | (I) விலைமனுதாரர் செல்லுபடியாகும் வர்த்தகப் பதிவைப் பெற்றுள்ளவராக இருத்தல் வேண்டும். (II) விலைமனுதாரர் கடந்த (05) ஐந்தாண்டுகளில் குறைந்தபட்சம் 300 எண்ணிக்கையான பயணிகள் வாங்குகளை உற்பத்தி செய்திருத்தல் வேண்டும். மேலதிக விபரங்கள் விலைமனுப்படிவங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | |

*6.* இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022.08.22 ஆந் திகதி முதல் 2022.09.12 ஆந் திகதி வரை பி.ப. 3.00 மணி வரை ( இலங்கை நேரம்) அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி எழுத்துருவ விண்ணப்பமொன்றை இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள், பெறுகை உப திணைக்களம் (பெறுகை) பிரதிப் பொது முகாமையாளருக்குச் சமர்ப்பித்து இதற்கான ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைமனுப் படிவத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.

*7.* அனைத்து விலைமனுக்களுடனும் விலைமனுப் பிணையமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்றுள்ள இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனைகளற்ற விலைமனுப் பிணையமொன்றாக இது இருத்தல் வேண்டும்.

*8. 2022.09.13* ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர், பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் கிடைக்கச் செய்தல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படும். அவ் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பெற்ற பிரதிநிதிகள் சமுகமளித்திருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

தலைவர்,
செயற்றிட்டப் பெறுகைக்குழு,
புகையிரத சேவைகள் பெறுகை,
உப திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

தலைவர்,
செயற்றிட்டப் பெறுகைக்குழு,
இலங்கைப் புகையிரத சேவைகள்.

09- 81

---

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம்- அக்கரைப்பற்று

*அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள சான்றுப் பொருட்களின் ஏல விற்பனை– 2022*

*அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாத கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள் எதிர்வரும் 2022.09.11 ஆந் திகதியன்று காலை 9.00 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஏலத்தில் விற்கப்படும்.*

*01.* இப் பொருட்களுக்காக உரிமை கோருபவர்கள் எவரும் இருப்பின் அன்றைய தினம் ஏல விற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும்.

*02.* பொருட்கள் மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்பதாகப் பார்வையிடலாம்.

*03.* பகிரங்க ஏல விற்பனையின்போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்களுக்குரிய விலை கிடைக்கப்பெறாதவிடத்து ஏல விற்பனையிலிருந்து மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே கொண்டிருக்கும்.

*04.* விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கான பணத்தை உடன் செலுத்தி உடனடியாகவே நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும்.

05. எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செலுத்தப்படல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

06. பொருட்களை கொள்வனவு செய்வோர் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வரவேண்டும்.

பதிவாளர்.

நீதிவான் நீதிமன்றம்,
அக்கரைப்பத்து.

| *தொ. இல.* | *வழக்கிலக்கம்* | *பொருள் விபரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|---|
| 1. | AR/1680/22 | மோட்டார் சைக்கிள் ( Hero Honda CD-100ss) | 1 |
| 2. | AR/1681/22 | மோட்டார் சைக்கிள் | 1 |
| 3. | AR/1682/22 | மோட்டார் சைக்கிள் ( Yamaha Mate 50) | 1 |
| 4. | AR/1683/22 | மோட்டார் சைக்கிள் ( EP- GH- 8645) | 1 |
| 5. | AR/1684/22 | மோட்டார் சைக்கிள் ( 126- 4317) | 1 |
| 6. | AR/1685/22 | மோட்டார் சைக்கிள் | 1 |
| 7. | AR/1686/22 | மோட்டாரார் சைக்கிள் ( 125- 3002) | 1 |
| 8. | AR/1687/22 | மோட்டார் சைக்கிள் ( JIYANSE) | 1 |
| 9. | AR/1688/22 | மோட்டார் சைக்கிள் ( YAMAHA MATE 50) | 1 |
| 10. | AR/1689/22 | மோட்டார் சைக்கிள் | 1 |
| 11. | AR/1690/22 | மோட்டார் சைக்கிள் | 1 |
| 12. | AR/1691/22 | மோட்டார் சைக்கிள் | 1 |
| 13. | AR/1692/22 | மோட்டாரார் சைக்கிள் ( CT-100 EP BFY- 7793 | 1 |
| 14. | AR/1693/22 | மோட்டாரார் சைக்கிள் (PULSAR VH - 4793) | 1 |
| 15. | AR/1694/22 | மோட்டார் சைக்கிள் | 1 |

| தொ. இல. | வழக்கிலக்கம் | பொருள் விபரம் |
|---|---|---|
| 1. | 62969/ Misc/ 22 | மண் |
| 2. | 62970/ Misc/ 22 | மண் |
| 3. | 62983/ Misc/ 22 | மண் |
| 4. | 62984/ Misc/ 22 | மண் |
| 5. | 63021/ Misc/ 22 | மண் |
| 6. | 63025/ Misc/ 22 | மண் |
| 7. | 63029/ Misc/ 22 | மண் |
| 8. | 63030/ Misc/ 22 | மண் |
| 9. | 63047/ Misc/ 22 | மண் |
| 10. | 63073/ Misc/ 22 | மண் |
| 11. | 63072/ Misc/ 22 | மண் |
| 2. | 63092/ Misc/ 22 | மண் |

*09- 75*

---

# ஆய விற்பனையும் குத்தகையும்

## உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் 2023 ஆம் ஆண்டுக்கான கள்ளுத் தவறணைகளை மீண்டும் குத்தகைக்கு வழங்கல்

*2023 ஆம் ஆண்டிற்குரிய வகையில் 2022.08.22 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு உடபலாத்த பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்ட புஸ்ஸெல்லாவ மற்றும் வஹூகபிட்டிய கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நடவடிக்கையின்போது கேள்வி அறிவித்தல் சபை திருப்தியுரும் வகையில் கேள்வி அறிவித்தல் விலை மனுக்கள் முன்வைக்கப்படாமையின் காரணமாக மேற்படி கள்ளுத் தவறணைகளை மீண்டும் குத்தகைக்கு விட மதுவரிகள் ஆணையாளர் நாயகம் அவர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்குரிய அறிவித்தல் மற்றும் நிபந்தனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.*

*1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப் பகுதிக்கும், ஏற்புடையதான கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும், அக்காலப்பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2022 ஆம் ஆண்டில் கள்ளுத் தவறணைகளை சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை கொள்வனவு செய்வதற்காக உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் 2022.09.22 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. அனைத்துக் கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். என்பதுடன்-*

*(அ) கேள்விப் பிணைப்பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டு குறித்த பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும், மற்றும்*

*(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழ் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*கேள்விப்பத்திரம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ்கள் சமர்ப்பிப்பது தொடர்பாக மேற்படி கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகள் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளைச் சரியான முறையில் பின்பற்றப்பட வேண்டும் என கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பவர்களிடம் இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது.*

கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரதாரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை இலக்கத்தில் மாத்திரம் அன்றி எழுத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும் ;

(ii) நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்களில் உரிய சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விப்பத்திரதாரரின் சுருக்க கையொப்பம் மற்றும் திகதி இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இங்கு நியதிகளுக்குப் புறம்பான வகையில் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரங்கள்-

(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டு ; மற்றும்

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடன்.

இணைத்து, கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கம் மற்றும் பெயர்", என்பவற்றைக் குறிப்பிட்டு உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவடைவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இல்லாவிட்டால் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவடைவதற்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விப்பத்திரதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விப்பத்திரதாரரின் "சிறப்புரிமைகளை வழங்கியவர்" என பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய கள்ளுத் தவறணைகள் விற்பனை செய்யும் நிபந்தனைக்கொத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" எனக் குறிப்பிட்ட காசோலை ஒன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியிலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

6. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

ஆர்.ஏ.டீ.ரீ.என்.தென்னகோன்,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த.

பிரதேச செயலகம்,
உடபலாத்த,
கம்பளை,
2022, ஓகத்து 26 .

**அட்டவணை**

*2023 ஆம் ஆண்டிற்கான கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளின் பட்டியல்*

| *தொடர் இலக்கமும் பெயரும்* | *பிரிவு* | *தவறணை அமைய வேண்டிய பிரதேசம்* | *தவறணை திறந்திருக்க வேண்டிய நேரங்கள்* | *கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | *கேள்வி வைப்புத் தொகை ரூ. ச.* |
|---|---|---|---|---|---|
| 1. வஹுக்கப்பிட்டிய கள்ளுத் தவறணை | உடபலாத்த | உடபலாத்த வஹுக்கப்பிட்டிய கிராமத்திற்குள் | மு. ப. 11.00 மணியில் இருந்து பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணியில் இருந்து பி. ப. 8.00 மணி வரை | 2022.09.22ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை | 1,500.00 |
| 2. புஸ்ஸெல்லாவ கள்ளுத்தவறணை | உடபலாத்த | உடபலாத்த புஸ்ஸெல்லாவ நகரத்தின் எல்லைக்குள் | மு. ப. 11.00 மணியில் இருந்து பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணியில் இருந்து பி. ப. 8.00 மணி வரை | 2022.09.22ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை | 3,000.00 |

09-112/2

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**வெகிக்கிள் லவேர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்**

**கம்பனியின் பதிவு இல. PV 14437**
**கம்பனி கலைப்பு மற்றும் கலைப்பாளர் விடுவிப்பு அறிவித்தல்**

*கம்பனியின் பெயர்:* வெகிக்கிள் லவேர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல.310A, ஹைலெவல் வீதி, கொழும்பு 6
*நீதிமன்றம்:* வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இல.:* HC (CIVIL 23/2011/CO
*கம்பனி கலைப்பாளர் பெயர்:* G.J.David
*முகவரி:* Level 4, No.2, (presently at Level 3, No.11,) castle Lane, Colombo 4.
*கம்பனி கலைப்பு மற்றும் கலைப்பாளர் விடுவிப்பு திகதி:* 2022.07.28

09- 106

**சி எவ் டி மார்கெட்டிங் (பிரைவேட்) லிமிட்டட்**
**கம்பனியின் பதிவு இல. PV 87024**
**கூட்டுக் கலைப்பாளராக இணைந்து செயற்பட்ட ஒரு கலைப்பாளரை விடுவிப்பதற்கான அறிவிப்பு**

**1989 ஆம் ஆண்டு 162(2 ஆம் இலக்க கம்பனிகளை ஒடுக்குவதற்கான விதிகள் மற்றும் கம்பனி சட்டத்திற்குட்பட்டது**

*கம்பனியின் பெயர்:* சி எவ் டி மார்கெட்டிங் (பிரைவேட்) லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல.38, சிறிமல் உயன, மத்தேகொட, பொல்கஸ்ஓவிட்ட
*நீதிமன்றம்:* வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இல.:* HC (CIVIL 27/18/CO
*கம்பனி கூட்டு கலைப்பாளர்களின் பெயர்:* P.E.A. Jayewickreme & G.J.David

*முகவரி:* Level 3, No.11, castle Lane, Colombo 4.
*விடுவிக்கப்பட்ட கலைப்பாளரின் பெயர்:* P.E.A. Jayewickreme
*கலைப்பாளர் விடுவிப்பு திகதி:* 2022.05.30

கீழே கையொப்பமிட்டுள்ள நான், கொழும்பு வணிக உயர் நீதிமன்றத்தின் கலைப்பாளர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டதாகவும், அதன் மூலம் (மற்றொருவரின் பதிவியில் நீடிப்பதில் பாரபட்சமின்றி) மேற்படி நிறுவனத்தின் கூட்டுக்கலைப்பாளர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டதாகவும் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வழங்கப்பட்டது.

*அலுவலகத்தில் மீதமுள்ள கலைப்பாளர் பெயர்:* G.J.David மேலே உள்ள நிறுவனத்தின் கலைப்பாளராகத் தொடர்ந்து செயலாற்றுவார்.

பி.இ.ஏ.ஜெயவிக்ரமே,
கூட்டுக்கலைப்பாளர்,

2022, ஓகத்து 19.

09- 107

---

**றிச்சர்ட் றொபர்ட்ஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டட்**

**கம்பனியின் பதிவு இல. PV 18107**
**கம்பனி கலைப்பு மற்றும் கலைப்பாளர் விடுவிப்பு அறிவித்தல்**

*கம்பனியின் பெயர்:* றிச்சர்ட் றொபர்ட்ஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல.02, காசல் லேன், கொழும்பு4
*நீதிமன்றம்:* வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இல.:* HC (CIVIL 62/2017/CO
*கம்பனி கலைப்பாளர் பெயர்:* P.E.A. Jayewickreme
*முகவரி:* Level 3, No.11, castle Lane, Colombo 4.
*கலைப்பாளர் விடுவிப்பு திகதி:* 2022.07.29

09- 108

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்து இல்லாதொழித்தல்**

சகலரும் யாழ்ப்பாணம், "சிவா" கோண்டாவில் மேற்கு பாடசாலை ஒழுங்கை மற்றும் தற்பொழுது ஐக்கிய இராச்சியம், கென்ட், BRI SJY ப்ரும்லி, பென்டரகன் வீதி, 20 இல் வசிக்கும் பாலசுந்தரம் சிவயோகம் ஆகிய நான், யாழ்ப்பாணம், கோண்டாவில், புகையிரத நிலைய வீதி என்ற முகவரியைச் சேர்ந்த ஆறுமுகம் ஜெயதாசன் (தே.அ.அ.இல. 560152159V) என்பவருக்கு என்னால் அளிக்கப்பட்ட யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு எஸ். என். சத்தியநாதன் அவர்களால் வரையப்பட்டு 2020.01.09 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டு வட மாகணத்திற்குட்பட்ட யாழ்ப்பாணம் உதவி பதிவாளர் நாயக அலுவலகத்தில் 68 ஆம் தினப் புத்தகத்தில் 28 ஆம் இலக்க தாளில் மற்றும் 127 ஆம் இலக்க புத்தகத்தில் 2020.01.17 ஆந் திகதியன்று பதிவு செய்யப்பட்ட விசேட அற்றோணித் தத்துவத்தை 2022.08.15 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்து இல்லாதொழிக்கின்றேன், அத்துடன் இதன் பின்னர் சொல்லப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் கீழ் அவரால் செய்யப்படும் எவ்வித செயலுக்கும் நான் பொறுப்பாளியல்ல எனவும் வெளிப்படுத்தி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

பாலசுந்தரம் சிவயோகன்.

09- 109

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்து இல்லாதொழித்தல்**

பார் சிட்டி, 697/3, ஏகாம்பரம் வீதி, உப்புவேலி, திருகோணமலை என்ற முகவரியைச் சேர்ந்த பிரிந்தாழினி ஜெயரட்டனகாந்தன் ஆகிய நான், இன்பசிட்டி, பருத்தித்துறை என்ற முகவரியைச் சேர்ந்த தர்மலிங்கம் ரவீந்திரராஜா (தே.அ.அ.இல. 542593857V) என்பவருக்கு என்னால் அளிக்கப்பட்ட டென்மார்க், 9240 நைபி, ஸ்கல்ஹியுஸ் 5 என்ற முகவரியைச் சேர்ந்த சட்டத்தரணி கால்- சேஜர் ஜெஸ்பர்சன் அவர்களால் வரையப்பட்டு 2016.03.31 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டு யாழ்ப்பாணம் பதிவாளர் நாயக அலுவலகத்தில் 1997ஆம் தொடர் இலக்கத்தில் 16 ஆம் இலக்கத் தாளில் மற்றும் 95 ஆம் இலக்கப் புத்தகத்தில் 2016.07.21 ஆந் திகதியன்று பதிவு செய்யப்பட்ட விசேட அற்றோணித் தத்துவத்தை 2022.08.15 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்து இல்லாதொழிக்கின்றேன். அத்துடன் இதன் பின்னர் சொல்லப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் கீழ் அவரால் செய்யப்படும் எவ்வித செயலுக்கும் நான் பொறுப்பாளியல்ல எனவும் வெளிப்படுத்தி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

பிரிந்தாழினி ஜெயரட்டனகாந்தன்.

09- 110

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

புசல்லாவையில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசு மொஹிதீன் பிச்சை ஓமர் ஹதாப் அவர்களினால் 2012.12.16 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 5306 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தின் பிரகாரம் இல. 371, தெனியகொட, கஹபத்தன, பூண்டுலோயா எனும் முகவரியில் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இல. 692860080V கொண்ட அப்துல் கரீம் மொஹம்மது ஆரிஸ் ஆகிய என்னால், என் சார்பாக செயற்படுவதற்காக இல. 371, தெனியகொட, கஹபத்தன, பூண்டுலோயா எனும் முகவரியில் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இல. 766800149V கொண்ட ரொஷான் பீபி என்பவருக்கு வழங்கியிருந்த அற்றோணிப் பத்திரத்தை இன்று முதல் இரத்துச் செய்கின்றேன் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் , மக்களுக்கும் தெரியப்படுத்துகின்றேன்.

அப்துல் கரீம் மொஹம்மது ஆரிஸ்.

இல. 371,
தெனியகொட,
கஹபத்தன,
பூண்டுலோயா.

09-111

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 323, மானிப்பாய் வீதி, உடுவில், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி யோகசிங்கம் கலாநிதி (தே.அ.அ.இல. 196081110065) ஆகிய நான், யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு செல்வி கிருஸ்ணவேணி சந்திரலிங்கம் முகதாவில் 2020 ஆம் ஆண்டு மாசி மாதம் 03 ஆந் திகதி 4496 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய விசேட அற்றோணித் தத்துவத்தின் மூலம் மானிப்பாய் வீதி, உடுவில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாகேந்திரன் சாளினி (தே.அ.அ.இல. 956471516V) ஆகியவருக்கு வழங்கிய அற்றோணித் தத்துவ அதிகாரத்தை முழுமையாக இரத்துச் செய்கின்றேன் என்பதனை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் வாழ் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

யோகசிங்கம் கலாநிதி.

09- 121

---

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

இல.54/ 114, வான் வீதி, புத்தளம் எனும் முகவரியில் வசிக்கும் அப்துல் வாஹித் மொஹமத் மஹ்ரூப் (தே.அ.அ.இல. 760570567V) ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசுக்கும், பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது 2011 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி புத்தளம் பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். எம். எஸ். அப்துல் காதர் அவர்களி னால் உறுதி செய்யப்பட்டதும் பதிவாளர் நாயகத்தின் வடமேல்/ வடமத்திய பிரதிப் பதிவாளர் நாயக வலய அலுவலகத்தின் 49 ஆம் இலக்க நாளாந்த பதிவேட்டுப் புத்தகத்தில் பதியப்பட்டு இல. 11/ பீ, 4 ஆம் ஒழுங்கை, வான் வீதி, புத்தளம் எனும் முகவரியில் வசிக்கும் அப்துல் வாஹித் மொஹமத் ஜிப்ரி (தே.அ.அ.இல.6836235890X) என்பவருக்கு வழங்கப்பட்ட 34179 ஆம் இலக்க விசேட அற்றோணித் தத்துவப்பத்திரம் 2022.09.02 ஆந் திகதி தொடக்கம் அமுலாகும் வகையில் இரத்துச் செய்யப்பட் டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

அப்துல் வாஹித் மொஹமத் மஹ்ரூப்.

09-122

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

எனது பெயரில் உள்ள இல. 71, 1 ஆம் குறுக்குத்தெருவில், வவுனியாவில் அமைந்துள்ள நன்கொடை உறுதி இல. 368 கொண்ட காணி தொடர்பாக P. ஜுயின் ஆனந்த ராஜா நொத்தாரிசு அவர்கள் முன்னிலையில் இல.452 கொண்ட அற்றோணித் தத்துவப்பத்திரம் மூலம் எனது சகோதரியான திருமதி சிவகௌரி கந்தசாமி என்பவருக்கு பராமரிப்பு செய்வதற்காக வழங்கியிருந்தேன். தற்போது என்னால் எனது காணியினை பராமரிக்கக்கூடிய நிலையில் உள்ளதால் திருமதி சிவகௌரி கன்தசாமிக்கு வழங்கிய அற்றோணித் தத்துவத்தை மீளப்பெறுவதற்கு முடிவு செய்துள்ளேன் என்பதனை சகலருக்கும் அறியத்தருவதோடு, இக்காணியில் திருமதி சிவகௌரி கந்தசாமிக்கு எதுவித உரிமை அல்லது அதிகாரம் இல்லை என சகலருக்கும் தெரிவிப்பதோடு இதன் பின்னர் திருமதி சிவகௌரி கந்தசாமியால் இக்காணி தொடர்பாக மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நான் பொறுப்பல்ல என தெரிவித்துக்கொள்கிறேன்.

சிவமணி லோறன்ஸ் அருள்ராஜ்.

09-132

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹோமாகம, நகர எல்லை மாவத்தை, ஸ்ரீ மஹிந்த மாவத்தை, இல. 03/ 725, எனும் முகவரியில் வசிக்கும் மிகல் ஜுலிகே சுமித்திரா (தே.அ.அ.இல. 658271865 V) ஆகிய நான், அதே முகவரியில் வசிக்கும் ஜயகொடிகே பியசேன என்பவருக்கு, குவைட் இராச்சியத்தின், இலங்கை தூதுவராலயத்தின் மூன்றாம் செயலாளர் எஸ். எஸ். எச். பீ. பிலப்பிட்டிய என்பவரால் 2017.12.18 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட அற்றோணிப் பத்திரத்தினால் வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக பொது மக்களுக்கு இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மிகல் ஜுலிகே சுமித்திரா.

09- 128

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் அனைவருக்கும் இத்தால் அறிவிக்கப்படுவதாவது,

காலி, எஸ். எச்.தஹநாயக்க மாவத்தை, இலக்கம் 69/26 இல் வசிக்கும் மொஹமட் முனீர் ஃபாதுமா ஃபஸ்லிஹா ஆகிய என்னால் காலி, பெலவத்தை, ரிச்மண்ட் மேடு வீதி, இலக்கம் 41/70 இல் வசிக்கும் மொஹமட் ஜிஃப்ரி சித்தி என்பவருக்கு வழங்கப்பட்டதும், காலி பிரசித்த நொத்தாரிசு திருமதி சத்துபானி லக்ஷிமா லெவ்கே பண்டார என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 840 மற்றும் 2022.08.01 ஆந் திகதியிட்ட அற்றோணித் தத்துவமானது இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றது. மேலும் இன்று முதல் செயல்வலுப்பெறும் வகையில் மேற்படி மொஹமட் ஜிஃப்ரி சித்தி என்பவரினால் என் சார்பில் மேற்கொள்ளப்படும் எந்தவித நடவடிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்கள் தொடர்பாக நான் பொறுப்புதாரியல்ல எனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

மொஹமட் முனீர் ஃபாதுமா ஃபஸ்லிஹா.

09- 91

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கந்தான, நிலவுள்ள, பென்டலியன் மாவத்தை, இல. 25/2 இடப்பட்ட இடத்தில் வசிக்கும் ( தே.அ.அ. இல. 196683600815) என்ற இலக்கமுடைய போருதொட்டகே ரேனுகா பிரியதர்ஷனி பர்னாந்து ஆகிய என்னால் கந்தான, நிலவுள்ள, மோலவத்தை வீதி, இல. 141/2A இடப்பட்ட இடத்தில் வசிக்கும் அதுகோரல ஆரச்சிகே ஜெரி சிரியான் அன்டன் பர்னாந்து என்பவருக்கு எனக்காக செயல்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டு கம்பஹா, பகிரங்க நொத்தாரிசு பியசிறி மொரப்பிட்டிய அவர்களால் 2010.05.02 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 3141 இடப்பட்ட எனது சம்பந்தப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இன்றிலிருந்து இரத்துச் செய்யப்பட்டுள்ளதை இத்தால் அறியத்தருகிறேன்.

இன்றிலிருந்து மேலே குறிப்பிடப்பட்ட அற்றோணித் தத்துவத்தை உபயோகப்படுத்தி செய்யப்படும் எவ்வித செயல்பாடுகளுக்கும் நான் பொறுப்புதாரி ஆகமாட்டேன் என இத்தால் அறியத்தருகின்றேன்.

போருதொட்டகே ரேனுகா பிரியதர்ஷனி
பர்னாந்து .

09- 92

---

## அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

### உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவு

*2023 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு மதுபான தவறணைகளை*

*குத்தகைக்கு வழங்கல்*

*2023 ஆம் ஆண்டிற்குரிய வகையில் 2022.08.22 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு உடபலாத்த பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்ட வெளிநாட்டு குடிபானத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நடவடிக்கையின் போது கேள்வி அறிவித்தல் சபை திருப்தியுறும் வகையில் கேள்வி அறிவித்தல் விலைமனுக்கள் முன்வைக்கப்படாமையின் காரணமாக மேற்படி வெளிநாட்டுக் குடிபானத் தவறணைகளை மீண்டும் குத்தகைக்கு விட மதுவரிகள் ஆணையாளர் நாயகம் அவர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்குரிய அறிவித்தல் மற்றும் நிபந்தனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.*

*02. 1982ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப் பகுதிக்கும், ஏற்புடையதான வெளிநாட்டு மதுபான வகைகளை விற்கும் நிபந்தனைகளுக்கும், அக்காலப் பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2023 ஆம் ஆண்டின் வெளிநாட்டுக் குடிவகைகளை சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் 2022.09.22ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

03. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் காணப்படும் ஏதாவதொரு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளும் விண்ணபப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் ; என்பதுடன்-

(அ) கேள்விப் பிணைப்பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டு குறித்த பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும் ; மற்றும்

(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழ் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ்கள் சமர்ப்பிப்பது தொடர்பாக மேற்படி வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகள் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளைச் சரியான முறையில் பின்பற்றப்பட வேண்டும் என கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பவர்களிடம் இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது.

கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரதாரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும் ;

(ii) நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்களில் உரிய சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) அனைத்து திருத்தங்களுக்கும் சொற்கள் வெட்டப்பட்டிருந்தாலும் கேள்விப்பத்திரதாரரின் சுருக்கக் கையொப்பம் மற்றும் திகதி இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இங்கு நியதிகளுக்குப் புறம்பான வகையில் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

04. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரங்கள்.-

(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டு மற்றும்

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழ்.

என்பன இணைக்கப்பட்டு கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறிப்பிட்டு உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவடைவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இல்லாவிட்டால் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவடைவதற்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

05. ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விப்பத்திரதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

06. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விப்பத்திரதாரரின் "சிறப்புரிமைகளை வழங்கியவர்" என பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய வெளிநாட்டு மதுபான வகைகள் தவறணைகள் விற்பனை செய்யும் நிபந்தனைப் படிவத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" எனக் குறிப்பிட்ட காசோலை ஒன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியிலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

7. மேலதிக விபரங்களை உடபலாத்த பிரதேச செயலகத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

ஆர்.ஏ.டீ.ரி.என்.தென்னகோன்,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த.

பிரதேச செயலகம்,
உடபலாத்த,
கம்பளை,
2022.08.26.

### அட்டவணை

*2023ஆம் ஆண்டுக்கான கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணைகளின் பட்டியல்*

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | தவறணை திறந்திருக்க வேண்டிய நேரங்கள் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புத் தொகை ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 1. புஸ்ஸெல்லாவ வெளிநாட்டு மதுபானத் தவறணை | உடபலாத்த | புஸ்ஸெல்லாவ நகரத்தின் எல்லைக்குள் | மு. ப. 11.00 மணியில் இருந்து பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணியில் இருந்து பி. ப. 8.00 மணி வரை | 2022.09.22 ஆந் திகதி மு. ப. 10.30 மணி | 3,000 |

9- 112/1

## ஏல விற்பனைகள்

### யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ

பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) 09 ஆவது சிறப்பு சட்டப்படி ஏல விற்பனை விளம்பரம்

**முதலாவது ஆதன இடாப்பு -**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம கோரளை, வெலிகம பிரதேச சபை எல்லையினுள் வெலிகம பிரதேச செயலாளர் பிரிவில், வடக்கு பெலேன கிராம அலுவலர் பிரிவினுள் பெலேன கிராமத்தில் அமைந்துள்ள மாத்தறை வீதி வரிமதிப்பீட்டு இல. 502, சேனாரத்ன ஜான் கலபுவ வத்த என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் எஸ். சமரசிங்க அவர்களால் அளந்து தாயரிக்கப்பட்ட இல. 3692 மற்றும்2015.01.08 ஆந் திகதியுடைய வரைபடத்தில் நிரூபிக்கப்பட்ட 04 என அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி ( அதிகாரம் பெற்ற நில அளவையாளர் என். விஜேவீர அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இல.6361 மற்றும் 2011.04.30 ஆந் திகதியுடைய வரைபடத்தில் நிரூபிக்கப்பட்ட லொட் 4 இல் மீண்டும் அளந்தவாறு காணியின் விஸ்தீரணம்: 0ஏ. 0றூ. 23.8பே.

விசாலமுடைய காணித்துண்டோடு மற்றும் அதனுள் அமைந்துள்ள மண், இலை, குலை, பயிர்ச்செய்கை, பழங்கள் , கட்டிடங்கள் ஆகிய அனைத்தும் மேலும் அதிகாரம் பெற்ற நில அளவையாளர் என். விஜேவீர அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 6361 மற்றும் 2011.04.30 ஆந் திகதியுடைய வரைபடத்தில் நிரூபிக்கப்பட்ட லொட் 10 ஊடாக பிரயாணம் செய்யும் பாதை உரிமையோடும்.

**இரண்டாவது ஆதன இடாப்பு -**

தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம், மாகம் பத்துவ, அம்பாந்தோட்டை பிரதேச சபை எல்லையினுள் அம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில், வலவ கிராம அலுவர் பிரிவில் வலவ கிராமத்தல் அமைந்துள்ள "யோடவெவ முணுபெலிய கும்புர" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் பி.பி . இலங்கசிங்க அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. H/5504 மற்றும் 2007.01.24ஆந் திகதியுடைய வரைபடத்தில் நிருபிக்கப்பட்ட லொட் A என அடையாளமிடப்பட்ட பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதியின் விஸ்தீரணம்: 0ஏ. 01றூ. 35.1பே.

விசாலமுடைய காணித்துண்டோடு மற்றும் அதனுள் அமைந்துள்ள மண், இலை, குலை, பயிர்ச்செய்கை, பழங்கள் , கட்டிடங்கள் ஆகிய அனைத்தும் மேலும் பிரவேச பாதை பாவனைக்காக பொது பாவனை செய்யும் உரிமையோடும் இந்த காணி அம்பாந்தோட்டை காணிப்பதிவு செய்யும் அலுவலகத்தில் H 29/ 60 என்ற இருமடிப்புத் தாளில் பதிவுசெய்யப்பட்ட வர்த்தமானியில் H 36/ 21 என்ற என்ற இருமடிப்புத் தாளில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும், தேனிப்பிட்டிய பொல்வத்த, கனேவத்த "நதீஷா" என்ற முகவரியில் வசிக்கும் ஜாசின் பதிரணகே ரஞ்ஜித் பந்துல (அடையாள அட்டை இலக்கம் 592845563V) என்ற மற்றும் மேற்குறித்த அம்பலாந்தோட, ஹுங்கங்வகுர இல. 347 என்ற முகவரியில் வசிக்கும் குருசிங்க ஆராச்சிகே நந்தா மாலனி(தேசிய அடையாள அட்டை இலக்கம் 667781531V)என்ற(இதன்பின்னர் "கடனாளியாக" என அறிமுகப்படுத்தும்) என்பவரால் கடன்

வசதிகளை பெற்றுக் கொள்வதோடும், மேற்குறித்த கடனாளி/ அடகு வைப்பாளர் பிரசித்த நொத்தாரிசு ஐ.பி. ஆரியசேன அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 9280 மற்றும் 2016.02.12 ஆந் திகதியுடைய ஆரம்ப ஈட்டு முறி மற்றும் அதே நொத்தாரிசு மூலம் உறுதிப்படுத்தப்பட்ட இல. 10529 மற்றும் 2018.02.06 ஆந் திகதியுடைய ஈட்டு முறி மற்றும் பிரசித்த நொத்தாரிசு பி.எல். சந்திரசேன அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இல. 1359 மற்றும் 2018.01.15 ஆந் திகதியுடைய ஈட்டு முறி மற்றும் அதே பிரசித்த நொத்தாரிசு உறுதிப்படுத்தப்பட்ட இல. 1556 மற்றும் 2019.05.27 ஆந் திகதியுடைய ஆரம்ப ஈட்டு முறியினை எழுதி கையொப்பமிட்டு மேற்குறித்த ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள காணியை மேற்குறித்த கடன்வசதிகளுக்காக கம்பனிகள் பதிவுசெய்யும் இல. PB 676PQ என்ற யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ (இதன் பின்னர் யூனியன் வங்கி என அறிமுகப்படுத்தப்படும்) பெற்றுக் கொள்வதற்காக மற்றும் அதன் மீதுள்ள வட்டியை மீளளிப்பதற்காக இங்கு மேலே குறிப்பிட்டப்பட்ட ஆதன இடாப்பில் விபரமாக விஸ்தரிக்கப்பட்டுள்ள காணியை பிணையாக ஈடுவைக்கப்பட்டுள்ளதாலும், யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீயினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்,

2 ஆவது ஆதன இடாப்பு - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி முற்பகல் 10.00 மணிக்கு

1 ஆவது ஆதன இடாப்பு - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு

மேல் சொல்லப்பட்ட காணிகளை என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**காணிக்குச் செல்லும் விதம்.- முதலாவது ஆதன இடாப்பு-** வெலிகம நகரத்தில் இருந்து பழைய மாத்தறை வீதியூடாக காகில்ஸ் பூட் சிடி கட்டிடங்கள் வரை 300 மீற்றர் வரை செல்லும் பொழுது "வெலிகல" (மண் விற்பனை நிலையம்) வரை மேலும் 100 மீற்றர் பிரயாணம் செய்யும் பொழுது 06 அடி அகல கொங்கிறீட் வீதியில் (அளவை திட்டத்தின் படி) வலது பக்கம் திரும்ப 50 மீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது காணியை அடையலாம். வீதியின் வலது பக்கத்தில் விடயமுடைய காணி அமைந்துள்ளது.

**காணிக்குச் செல்லும் விதம்.- இரண்டாவது ஆதன இடாப்பு-** அம்பலாந்தொட பஸ் தரிப்பிட நிலையத்தில் இருந்து சேனாநாயக்க மாவத்தை ஊடாக ( பஸ் தரிப்பிட நிலையத்தில் முழுமையாக எதிராக) 500 மீற்றர் வரை செல்லும் பொழுது (3ஆவது சந்தி வரை ) பொரலு வீதியில் இடது பக்கம் திரும்ப 150 அடி பிரயாணம் செய்யும் பொழுது அளவை திட்டத்தின்படி அடையாளமிடப்பட்ட பிரவேச பாதையில் வலது பக்கம் திரும்ப 75மீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது விடயமுடைய காணியை அடையலாம். விடயமுடைய காணி வீதியின் இறுதியாக அமைந்துள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-**உத்தேச கொள்வன வாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையின் 10%;
2. மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் யூனியன் பாங்க் பீஎல்சீ பிரதான அலுவலகத்தில் செலுத்த வேண்டும்;
3. ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% ;
4. உள்ளூராட்சி மன்ற வரி 1% ;
5. ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள், மற்றைய செலவுகள் 100% ;
6. இலிகிதர் கட்டடணம் ரூபா 2,000.00;
7. நொத்தாரிசு கட்டணம் .

இந்த ஏல விற்பனை சுகாதார அமைச்சு மூலம் கொவிட் 19 சம்பந்தமாக வெளியிட்டிருக்கும் வழிகாட்டல்களுக்கு அமைவாக நடைபெறும்.

எல். பி. சேனாநாயக்க,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர், மதிப்பீட்டாளர்,
கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம்,
கொழும்பு மாவட்ட நீதிமன்றம், அரச மற்றும் வர்த்தக
வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200, 2 ஆவதுமாடி, புதுக்கடை வீதி, கொழும்பு 12.
தொலைபேசி/பெக்ஸ் : 077-3242954, 011-2445393

சட்டப்பிரிவுத் திணைக்களம்,
யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ,
இல. 64, காலி வீதி,கொழும்பு 03,
தொ. பே. இல. : 011-2374100.

09-129

---

## யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ

பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) 09 ஆவது சிறப்பு சட்டப்படி ஏல விற்பனை விளம்பரம்

**ஆதனஇடாப்பு**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தேவமெதி ஹத்பத்துவ, உடகஹ கோரளை, பொல்கஹவெல பிரதேச சபை எல்லையினுள், வீரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவில் இல: 870 என்ற கோவை கிராம அலுவலர் பிரிவில், கோனவ கிராமத்தில் அமைந்துள்ள "சியம்பலாஹமுல வத்த" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நிளஅளவையாளர் எச். எம். எஸ். ஹெரத் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இல: 4345 மற்றும் 1996.08.19 ஆந் திகதியுடைய வரைபடத்தில் நிரூபிக்கப்பட்ட 2012.08.18 ஆந் திகதி ஒன்றிணைக்கப்பட்ட லொட் 1B என அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி. இக்காணியின் விஸ்தீரணம்.

(ஏ0-ரூ1-பே14)

விசாலமுடைய காணித்துண்டோடும் மற்றும் அதனுள் அமைந்துள்ள கட்டிடம், இலைகுலை, பயிர்ச்செய்கை, பழங்கள் ஆகிய அனைத்தும். இது குருநாகல் காணிப்பதிவு

அலுவலகத்தில் V 02/104 என்ற இருமடிப்புத் தாளில் கீழ் பதிவுசெய்யப்பட்ட, வர்த்தமானியில் குருநாகல் காணி பதிவு அலுவலகத்தில் V 98/13 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசிற்கும் பொது மக்களுக்கும், நாரம்மல, வீரம்புகெதர, இஹலகம, கோவை, இல: 140/1 என்ற விலாசத்தில் வசிக்கும் கஸ்தூரி முதியன் சேலாகே இந்திக ரவீந்திர பண்டார (அடையாள அட்டை இலக்கம்: 852342579V என்ற) (இதன்பின்னர் "கடனாளி" என அறிமுகப்படுத்தும்) என்பவரால், பிரசித்த நொத்தாரிசு ஈ. ஏ. ரெகவ அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இல: 18665 மற்றும் 2018.04.09 ஆந் திகதியுடைய ஆரம்ப ஈட்டுமுறியினை எழுதி கையொப்பமிடப்பட்டு, மேற்குறித்த ஆதனஇடாப்பில் விஸ்தரிக்கப்பட்டுள்ள காணியை மேற்குறித்த கடன் வசதிகளுக்காக, கம்பனிகள் பதிவுசெய்யும் இல: PB676PQ என்ற யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி (இதன்பின்னர் யூனியன் வங்கி என அறிமுகப்படுத்தப்படும்) பெற்றுக் கொள்வதற்காக மற்றும் அதன் மீதுள்ள வட்டியை, மீளளிப்புதற்காக இங்கு மேலே குறிப்பிடப்பட்ட ஆதன இடாப்பில் விபரமாக விஸ்தரிக்கப்பட்டுள்ள காணியை பிணையாக ஈடுவைக்கப்பட்டுள்ளதனாலும், யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்,

மேல் சொல்லப்பட்ட காணியை என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு

**காணிக்கு செல்லும் விதம்** - குருநாகல் நகரத்தில் இருந்து நீர்கொழும்பு வீதியில் களுகமுவ சந்தி வரை 13 கிலோமீட்டர் வரை பிரயாணம் செய்யும் பொழுது, வாரியபொல வீதியில் வலது பக்கம் திரும்ப, அதே வீதியில் 2.5 கிலோமீட்டர் வரை பிரயாணம் செய்யும் பொழுது முன்பள்ளி (மொன்டசோரி) யை தாண்டியதோடு, கிடைக்கும் 3/ 5 போக்குவ வீதியில் வலது பக்கம் திரும்ப (கொங்கிரீட் போட்டப்பட்ட போரலு வீதி) கிராம பக்கமாக 550 மீட்டர் வரை பிரயாணம் செய்யும் பொழுது, குறித்த காணி அதே பாதையில் வலது பக்க வீதியை அடையலாம்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.-உத்தேச கொள்வன வாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையின் 10%;
2. மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் யூனியன் பாங்க் பீஎல்சீ பிரதான அலுவலகத்தில் செலுத்த வேண்டும்;
3. ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% ;
4. உள்ளூராட்சி மன்ற வரி 1% ;
5. ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள், மற்றைய செலவுகள் 100% ;
6. இலிகிதர் கட்டணம் ரூபா 2,000.00;
7. நொத்தாரிசு கட்டணம் .

இந்த ஏல விற்பனை சுகாதார அமைச்சு மூலம் கொவிட் 19 சம்பந்தமாக வெளியிட்டிருக்கும் வழிகாட்டல்களுக்கு அமைவாக நடைபெறும்.

எல். பி. சேனாநாயக்க,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர், மதிப்பீட்டாளர்,
கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம்,
கொழும்பு மாவட்ட நீதிமன்றம், அரச மற்றும் வர்த்தக
வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200, 2 ஆவதுமாடி,
புதுக்கடை வீதி, கொழும்பு 12.
தொலைபேசி/பெக்ஸ் : 077-3242954, 011-2445393.

சட்டப்பிரிவுத் திணைக்களம்,
யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ,
இல. 64, காலி வீதி,கொழும்பு 03,
தொ. பே. இல. : 011-2374100.

09-130

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

டபிள்யூ. பிரேமவன்ஷ
கணக்கு இலக்கம் : 0129 5000 4922

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2022.06.30ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2022.08.26ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2022.08.15ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான எண்பத்தி ஆறு இலட்சத்து தொண்ணூற்றி இரண்டாயிரத்து இருநூற்று முப்பத்தி ஒரு ரூபா இருபத்தி எட்டு சதம் (ரூபா 8,692,231.28) 2022, மே 17 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை எழுபது இலட்சத்து முப்பத்தி

நான்காயிரம் ரூபா இருபது சதம் (ரூபா 7,034,000.20) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு ஒன்பது வீதம் (9%) மேலும் ஒன்பது இலட்சத்து அறுபத்தி எட்டாயிரத்து முந்நூற்று ஐந்து ரூபா முப்பத்தி ஒரு சதம் (ரூபா 968,305.31) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் நான்கு வீதம் (14%) மேலும் ஒரு இலட்சத்து தொண்ணூற்றி ஏழாயிரத்து நானூற்று தொண்ணூற்றி எட்டு ரூபா இருபத்தி ஆறு சதம் (ரூபா 197,498.26) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பத்து வீதம் (10%) மேலும் ஒரு இலட்சத்து பதின் ஆறாயிரத்து நூற்று ஐம்பத்தி இரண்டு ரூபா முப்பத்தி ஒரு சதம் (ரூபா 116,152.31) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு ஒன்பது வீதம் (9%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 1033 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ.கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2022.09.30ஆந் திகதி மு.ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

வட மத்திய மாகாணம், குருநாகல் மாவட்டம், தம்பதெனி ஹத்பத்து உடுகாஹா கோரளே (வடக்கு) நாரம்மல பிரதேச சபை மற்றும் நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவு எல்லைகளுக்குள் கினிகத்பிட்டிய கிராம அலுவலர் பிரிவின் லீனியாவத்த கிராமத்தில் அமைந்த "பேரகஸ்எலவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஈ. ஏ. ஜீ. எதிரிசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2017, ஏப்பிறல் 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 217045 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: இதே காணியின் பகுதி ; கிழக்கு: இங்கமைந்த லொட் 2, இங்கமைந்த லொட் 3 (10 அடிகள் அகல வீதி) மற்றும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் வை. எம். ஏ. யாப்பா என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 2915 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட காணி ; தெற்கு : மேற்கூறப்பட்ட இல. 2915 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட காணி மற்றும் மேரி மௌண்ட் எஸ்டேட் மற்றும் மேற்கு: மேரி மௌண்ட் எஸ்டேட், ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் பதின் எட்டு பேர்ச் (0ஏ.1றூ.18பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 217045 எனும் வரைபடத்திற்கு அமைவாக குளியாப்பிட்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் T 108/127 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இல. 217045 எனும் வரைபடத்தில் நேர்த்தியாக விபரிக்கப்பட்ட வீதி ஒதுக்கம் லொட் 3 இன் மீதும் அதன் ஊடாகவும் அதன் கீழும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

மேற்கூறப்பட்ட லீனியாவத்த கிராமத்தில் அமைந்த "பேரகஸ்எலவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஈ. ஏ. ஜீ. எதிரிசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2017, ஏப்பிறல் 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 217045 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 3 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: இங்கமைந்த லொட் 2 ; கிழக்கு: குளியாப்பிட்டி முதல் நாரம்மலை வரையான வீதி (ஹைவே); தெற்கு : மேற்கூறப்பட்ட இல. 2915 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட காணி மற்றும் மேற்கு: இங்கமைந்த லொட் 1, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து பேர்ச் (0ஏ.0றூ.10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 217045 எனும் வரைபடத்திற்கு அமைவாக குளியாப்பிட்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் T 108/128 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

09-134

---

### மக்கள் வங்கி - கடுகண்ணாவ கிளை

### பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D ஆம் பிரிவின் கீழான விற்பனை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், யட்டிநுவர கந்து பலாத்த கோரளே, யட்டிநுவர பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட, கடுகண்ணாவ நகர எல்லைக்குள், கடவத்கம கிராம அலுவலர் பிரிவில் கடவத்கமயில் அமைந்துள்ள, அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் டீ. ஆர். அபேகோன் அவர்களால் 2010, மாச்சு 10 ஆந் திகதி அளந்து வரையப்பட்ட 2334 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு '01' எனக் குறிப்பிடப்பட்டுள்ள 'திலிகமுவே கும்புர' என அழைக்கப்படும் காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 27பே.
அதிலுள்ள கட்டடங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கலாக கண்டி காணிப்பதிவகத்தில் தொகுதி /பக்கம் டீ 508/235 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**காணிக்குச் சென்றடைகின்ற வழி.-** கடுகண்ணாவ நகரிலிருந்து கண்டி வீதி வழியாக பிலிமத்தலாவை நோக்கி சுமார் 750 மீற்றர் தூரம் வரை விகாரையை அடைந்ததும் 101 ஆவது மைல்கல்லைத் தாண்டி சுமார் 40 மீற்றர் செல்கையில்,

கடுகண்ணாவை நகர சபை விளையாட்டு மைதானத்திற்கு சில மீற்றர்கள் செல்கையில் கடுகண்ணாவ நகர சபை விளையாட்டு மைதானத்துக்கு சில மீற்றர்களுக்கு முன் பாதையின் இடது பக்கத்தில் அமைந்துள்ள குறித்த ஆதனத்தை சென்றடையலாம்.

மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, 2022.09.30 ஆந் திகதி வியாழக்கிழமை மக்கள் வங்கி கடுகண்ணாவைக் கிளை வளாகத்தில் மு.ப. 10.00 மணிக்கு எம்மால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID - 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் ஏல விற்பனை நடைபெறும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- தயவு செய்து 2021, ஏப்பிறல் 23 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2021, ஏப்பிறல் 23 ஆந் திகதிய "டெயிலி நியுஸ்", "தினமின" மற்றும் தினகரன் செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகத் தனித்தனியாக முழுமையாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையில் 10 % (பத்து சதவீதம்);
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி - விற்பனை விலையில் 1 % (ஒரு சதவீதம்);
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும் ;
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூபா 5000.00;
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும்;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம் .

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் முகாமையாளர், மக்கள் வங்கி கடுகண்ணாவக் கிளை என்ற முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படா விட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை பறிமுதல் செய்வ தற்கும், உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

காணி உறுதியின் பிரதிகளையும் ஏனைய விபரங்களையும் மேற் குறிப்பிடப்பட்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'.

பிரேமசிறி வடுகே,
சமாதான நீதிவான்,
ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற பதிவாளர்,
உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

"உத்பலா", சந்தகிரி வத்த, கம்பஹா.
தொலைபேசி: 0777-003939, 071-1659616, 071- 6172804.

09- 146